புரட்சிப்
பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • ஜுன் 13, 2024 • புரட்சி 24 • முழக்கம் 22 • விலை ரூ.3.00

# தரத்தைக் கெடுக்கும் தேர்வு ‘நீட்’

தகுதிவாய்ந்த மருத்துவர்களை உருவாக்குவதற்காக நீட் தேர்வை கொண்டு வருவதாகக் கூறினார்கள். ஆனால் நீட் எத்தகைய தரங்கெட்ட தேர்வு என்பதற்கான அடுக்கடுக்கான ஆதாரங்கள் வெளிவந்துள்ளன. இந்த ஆண்டு ஜூன் 14ஆம் தேதி தான் நீட் தேர்வு முடிவுகள் வெளியாகியிருக்க வேண்டும். ஆனால் நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியான ஜூன் 4 ஆம் தேதி அவசர அவசரமாக தேர்வு முடிவுகளை வெளியிட்டு இருக்கிறது தேசியத் தேர்வு முகமை. இத்தேர்வில் நடைபெற்றிருக்கிற மோசடிகள் வெளியே தெரிந்து விடக்கூடாது என்பதற்காகவே, தேர்தல் முடிவுகள் வெளியான நாளில் அரசியல் களேபரங்களுக்கு மத்தியில் தேர்வு முடிவுகளும் வெளியிடப் பட்டிருக்கலாம் என்று சந்தேகம் வரவைக்கும் அளவுக்கு எக்கச்சக்கமான குளறுபடிகள் நடந்திருக்கின்றன.

தேர்வு நடைபெற்ற 4750 மையங்களில், ஒரே பயிற்சி மையத்தைச் சேர்ந்த ஆறு பேர் 720க்கு 720 மதிப்பெண் எடுத்துள்ளார்கள். இந்த ஆறு பேரின் பதிவெண்கள் அடுத்தடுத்து உள்ளன. எனவே இதில் முறைகேடு நடந்திருக்க வாய்ப்பே இல்லை என்று எவராலும் கூறிவிட இயலாது. அதேபோல எந்த ஆண்டும் இல்லாத வகையில் இந்த ஆண்டு 64 பேர் 720 என்ற முழுமையான மதிப்பெண்ணை எடுத்துள்ளார்கள். 718, 719 மதிப்பெண்களும் சிலர் பெற்றுள்ளனர். இது எப்படி சாத்தியமாகும்? ஒரு கேள்விக்கு தவறாக மதிப்பெண் அளித்தால் 4 மதிப்பெண்ணும், 1 மைனஸ் மதிப்பெண்ணும் போகும். ஒருவர் 720 - 715 - 710 என்ற அடிப்படையில் மதிப்பெண் பெறலாம். ஆக, 718, 719 மதிப்பெண் பெற்றவர்களுக்கு எந்த அடிப்படையில் மதிப்பெண் வழங்கப்பட்டுள்ளது? கருணை மதிப்பெண் அளித்ததாகச் சொல்கிறார்கள். எந்த அடிப்படையில் கருணை மதிப்பெண் அளிக்கப்பட்டது என்பது குறித்து தெளிவான விளக்கம் இல்லை.

தேர்வுக்கு முந்தைய நாளே சிலருக்கு கேள்வித் தாளைக் கொடுத்து படிக்க வைத்து - அதற்காக ஒவ்வொருவரிடமும் பல லட்சம் பெற்றதாக ஒரு கும்பல் கைது செய்யப்பட்டுள்ளது. தேர்வு அறைக்கு தாமதமாக வருபவர்களை அனுமதிப்பதும் ஒருவகையில் மோசடியே. அப்படி தாமதமாக வந்தவர்களை எழுத அனுமதித்தது மட்டுமின்றி, கடைசியில் நேர நீட்டிப்பு வழங்கிய சம்பவங்களும் நடந்திருப்பதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன. எதையுமே எழுதாமல் வினாத்தாளைக் கொடுத்த ஒருவருக்கு, தேர்வு அறையில் இருந்த ஆசிரியரே பதில்களை நிரப்பி சேர்த்துவிட்டதாக கைது செய்யப்பட்டுள்ளார். வடமாநிலங்களில் இத்தகைய குளறுபடிகள், தில்லுமுல்லுகள் சர்வ சாதாரணமாக நடைபெறும் அதேவேளையில்தான், தமிழ்நாட்டில் தேர்வு மையங்களில் மாணவ, மாணவிகளின் ஆடைகளைக் கூட களைந்து கடும் சோதனை செய்வதும், அவர்களை தேர்வுக்கு அனுப்பும் முன்னேயே மன உளைச்சலுக்கு உள்ளாக்குவதும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.



இத்தனை முறைகேடுகளுடன் நடந்த நீட் தேர்வை ரத்து செய்து விட்டு, புதிய அட்டவணையின் அடிப்படையில் நீட் தேர்வை மீண்டும் நடத்த வேண்டும் என்று நீட் தேர்வு எழுதிய மாணவர்கள் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் பொதுநல மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இதை அவசர வழக்காக விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உச்சநீதிமன்ற கோடைக்கால சிறப்பு அமர்வு, “நாடு முழுவதும் 24 லட்சம் மாணவர்கள் நீட் தேர்வு எழுதியுள்ளனர். இதுபோன்ற சூழலில் தேர்வை ரத்து செய்தால் அது அனைத்து மாணவர்களையும் பாதிக்கும். இருப்பினும் இந்த விவகாரத்தில் தேசியத் தேர்வுகள் முகமை பதிலளிக்க வேண்டும். இதுபோன்ற வரைமுறையில்லாத குளறுபடிகளால் நீட் தேர்வின் புனிதத்தன்மை பாதிக்கப்பட்டுள்ளது” என்று வேதனை தெரிவித்து விசாரணையை ஜூலை எட்டாம் தேதிக்கு ஒத்திவைத்துள்ளனர். நீட் தேர்வின் மீது தேவையற்ற புனிதப் பிம்பம் கட்டியமைக்கப்பட்டு இருக்கிறது என்பது உச்சநீதிமன்றத்தின் கருத்தில் இருந்தும் அறிந்துகொள்ள முடிகிறது. மருத்துவக் கல்வியின் தரத்தைக் கெடுக்கத்தான் இந்தப் புனித பிம்பம் பயன்பட்டிருக்கிறது.

## அன்று எதிர்ப்பு; இன்று திணிப்பு

**குஜராத் மாநில முதலமைச்சராக மோடி இருந்தபோது நீட் தேர்வை எதிர்த்தார். ஏற்றுக் கொள்ளவில்லை. குஜராத் மாநில அரசு இந்திய மருத்துவக் கவுன்சிலுக்கு ‘நீட்’ தேர்வு எதிர்ப்புக் கடிதம் அனுப்பியது. 2011 ஆகஸ்ட் 11 ஆம் தேதியன்று குஜராத் மாநில சுகாதார அமைச்சர் ஜெயநாராயணன் வியாஸ் எழுதிய கடிதத்தில், “எங்கள் மாநிலத்தில் அதிகமான மாணவர்கள் மருத்துவர்களாக வரவேண்டும் என்பது எங்கள் மாநில உரிமையாகும். இந்திய மருத்துவக் கவுன்சில் எங்களை ‘நீட்’டுக்காகத் தயாராகுமாறு கூறியிருந்தது. ஆனால், எங்களால் ‘நீட்’ தேர்வை ஏற்க முடியாது. எங்கள் மாநிலத்திற்கென்று சிறந்த கல்வி அமைப்பு உள்ளது. இதன் அடிப்படையில் மருத்துவக் கல்லூரியில் எங்கள் மாணவர்கள் சேர்க்கப்பட்டு வருகின்றனர்.**

**நாங்கள் ‘நீட்’ பற்றி ஒரு குழு அமைத்து ஆலோசனை செய்தோம். அந்தக் குழு மாநில அரசின் பாடத் திட்டத்தின்படி படிக்கும் மாணவர்களுக்கு “நீட்” தேர்வு சுமையை ஏற்படுத்தும் என்று அந்தக் குழு தனது அறிக்கையில் கூறியிருக்கிறது. ஆகவே, நாங்கள் ‘நீட்’டை ஏற்றுக்கொள்ள முடியாது.” என்று எதிர்ப்பைப் பதிவு செய்தார். மாநிலங்களின் தயவோடு மூன்றாவது முறையாக ஆட்சியமைத்திருக்கும் நரேந்திர மோடி, இப்போதாவது மாநிலங்களின் நலனை சிந்திக்க வேண்டும். அல்லது, தான் மாநில முதல்வராக இருந்தபோது வைத்த கோரிக்கைகளின் நியாயத்தையாவது உணர வேண்டும்.**

**நீட் தேர்வு வினாத்தாள் கசிந்த விவகாரத்தில் பீகாரின் பொருளாதார குற்றப்பிரிவு, 4 மாணவர்கள், அவர்களின் பெற்றோர்கள் உட்பட 13 பேரை கைது செய்துள்ளது. பீகார் பொதுப்பணித்துறையில் ஆசிரியர் தேர்வுக் குழுவில் இருந்த ஒருவரும் கைதாகியுள்ளார்.**

ஏழை, எளிய மாணவர்களின் மருத்துவக் கனவையும், தமிழ்நாட்டின் தலைசிறந்த மருத்துவக் கட்டமைப்பையும் நீட் தேர்வு சிதைக்கிறது என்று தொடக்கத்தில் இருந்தே தமிழ்நாடு எதிர்த்துக்கொண்டு இருக்கிறது. தமிழ்நாட்டில் பாரதிய ஜனதா கட்சியைத் தவிர திமுக, அதிமுக உள்ளிட்ட மற்ற அனைத்துக் கட்சிகளும் நீட் எதிர்ப்பு நிலைப்பாட்டில் ஒருமித்து உள்ளன. தமிழ்நாட்டின் நியாயத்தை உணர்ந்து காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியும் கடந்தமுறை நாடாளுமன்றத்திலேயே நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டுக்கு விலக்கு அளிக்க வேண்டுமென்று குரல் எழுப்பினார். காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையிலும் நீட் தேர்வை விரும்பாத மாநிலங்கள் நடத்திக்கொள்ள தேவையில்லை என்பதை வாக்குறுதியாக அளித்திருந்தனர்.

இதுவரையில் பாஜக அல்லது இந்துத்துவவாதிகளிடம் இருந்து வந்த பதில், “தமிழ்நாடு மட்டும்தான் எதிர்க்கிறது” என்றார்கள். இந்த ஆண்டு நீட் தேர்வில் நடைபெற்றிருக்கும் மோசடிகளைக் கண்டு, அகில இந்திய அளவில் எதிர்ப்புகள் வெடித்திருக்கிறது. ‘நீட்’ தேர்வில் மராட்டிய மாணவர்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். நடந்து முடிந்த தேர்வை ரத்து செய்ய வேண்டும்” என்று மராட்டிய மாநில அமைச்சர் அசன் முசுரிப் அறிக்கை வெளியிட்டுள்ளார். பா.ஜ.க. கூட்டணி ஆட்சி நடைபெறும் மராட்டியத்தில் இருந்து கிளம்பியிருக்கும் இந்த எதிர்ப்பு, மோடியின் வாரணாசி தொகுதி வரை எதிரொலித்திருக்கிறது. பிரதமரின் வாரணாசி தொகுதியில் நீட்-டுக்கு மறுதேர்வு கோரி ஊர்வலமே நடந்துள்ளது. வட மாநில இளைஞர்கள் சமூக வலைதளங்களில் நீட் தேர்வின் மோசடிகளை தோலுரித்து எழுதத் தொடங்கி உள்ளனர்.

நீட் தேர்வின் குளறுபடிகளுக்கு எதிராக காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி, அகிலேஷ் யாதவ் போன்றவர்களும் எதிர்ப்பை பதிவு செய்துள்ளனர். இந்த மோசடிகள் குறித்து பாரபட்சமற்ற விசாரணை நடத்த வேண்டுமென்று காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகள் கோரிக்கைவிடுத்துள்ளன. குளறுபடிகளை விசாரிப்பது மட்டுமே முழுமையான தீர்வாகாது. தகுதித்தேர்வு என்ற பெயரில் கல்வியின் தரத்தையே கெடுக்கும் நீட் தேர்வை ஒட்டுமொத்தமாக ரத்து செய்வதே முழுமையான தீர்வாகும்.

தலையங்கம்

## பாஜகவின் கலவரக் கொள்கை!

நடைபெற்று முடிந்த மக்களவைத் தேர்தலில் தனிப்பெரும் கட்சியாக பாஜகவே மீண்டும் உருவெடுத்திருந்தாலும், அந்த கட்சி பெற்றிருக்கிற பின்னடைவு மிகப்பெரியது. பாஜகவின் இந்த பின்னடைவு குறித்து ‘ஆர்கனைசர்’ இதழில் சுட்டிக் காட்டியிருக்கும் ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர் ரத்தன் சாரதா, “400 தொகுதிகளில் வெல்வோம் என்று கூறிக்கொண்டிருந்த பாஜக தலைவர்கள் – தொண்டர்களுக்கு கள உண்மை என்ன என்பதை உணர்த்துவதாக அமைந்திருக்கிறது தேர்தல் முடிவுகள். எதிர்க்கட்சிகளின் தைரியத்தை பாஜகவினர் உணராமல், கருத்துக்கணிப்பு மாயையில் மகிழ்ச்சி அடைந்திருந்தனர். மோடியின் புகழை மட்டும் ரசித்துக்கொண்டு, களத்தில் ஒலிக்கும் குரல்களை காது கொடுத்துக் கேட்காமல் விட்டுவிட்டனர். கூட்டணி விவகாரங்களில் எடுத்த தவறான முடிவால், பாஜகவின் மதிப்பு குறைந்துவிட்டது” என்று கடுமையான விமர்சனங்களை வைத்திருக்கிறார்.

ராமர் கோயிலை முன்வைத்து 30 ஆண்டு காலமாக பாஜக முன்னெடுத்து வந்த கலவர அரசியல் காலாவதியாகிவிட்டது. மோடி பிம்பமும் மக்களிடம் எடுபடவில்லை என்ற நிலையில், பாஜகவின் கட்டமைப்பிலேயே மீட்டுருவாக்கம் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது என்பதே ஆர்.எஸ்.எஸ். கண்டனத்தின் உள்நோக்கமாக இருக்கிறது. வட இந்தியாவிலேயே எடுபடாமல் போன இந்த கலவர அரசியலை, தமிழ்நாட்டில் முன்னெடுக்க வேண்டுமென்று பேசி சிறைக்குச் சென்றிருக்கிறார் இந்து மக்கள் கட்சியின் மாநில துணைத் தலைவரான ‘உடையார்’ என்பவர். அண்ணாமலை தலைமையில் பாஜக மிகப்பெரிய அளவுக்கு வளர்ந்துவிட்டதாக வெற்றுத் தோற்றத்தை ஏற்படுத்தி, ஊடகங்களையும் அதையே பேசவைத்து தேர்தலை சந்தித்தாலும் மக்கள் மிகத் தெளிவான தீர்ப்பை கொடுத்திருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் பாஜக 23 தொகுதிகளில் போட்டியிட்டு 11 தொகுதிகளில் வைப்புத்தொகையை கூட பெறாமல் படுதோல்வியைச் சந்தித்திருக்கிறது. இந்த விரக்தியில் பேசியிருக்கும் உடையார், “கலவரம் செய்தால்தான் பாஜக தமிழ்நாட்டில் காலூன்ற முடியும்” என்று கூறியிருக்கிறார். நெல்லையைச் சேர்ந்த பாஜக கிழக்கு மாவட்ட தலைவர் தமிழ்ச்செல்வனுடன் தொலைபேசியில் பேசிய இந்த ஆடியோ சமூக வலைத்தளங்களில் பரவி இப்போது பாளையங்கோட்டை மத்திய சிறையில் இருக்கிறார் உடையார். இப்படி பேசியதற்காக, இந்து மக்கள் கட்சியில் இருந்தும் தற்காலிகமாக நீக்கப்பட்டிருக்கிறார். உத்தரப் பிரதேசத்திலும், அரியானாவிலும் இப்படிப் பேசியிருந்தால் அவர் மீது வழக்குப்பதிவு கூட நடந்திருக்குமா எனத் தெரியவில்லை. ஆனால் இது தமிழ்நாடு. பெரியாரின் பகுத்தறிவு சிந்தனைகளால், திராவிட இயக்கத்தின் அரசியல் எழுச்சியால் பக்குவப்பட்ட மண். இங்கே கலவர சிந்தனைகளுக்கு மக்களும், ஆட்சியாளர்களும் ஒருபோதும் இடமளிக்க மாட்டார்கள்.

உடையாரின் பேச்சு, தனியொரு நபரின் கருத்து என்ற அளவில் சுருக்கப்பார்க்கப் பட வேண்டியதல்ல. அது ஒரு சித்தாந்தத்தின் சிந்தனை வெளிப்பாடு. கடந்த 3 ஆண்டுகளாக அண்ணாமலை தலைமையிலான பாஜகவின் முயற்சிகள் அனைத்தும் அந்த சிந்தனையை ஒட்டித்தான் இருந்திருக்கிறது. 2022ஆம் ஆண்டு தஞ்சையில் பள்ளி மாணவி ஒருவர் தற்கொலை செய்துகொண்ட விவகாரத்தில், பள்ளி நிர்வாகத்தின் கட்டாய மதமாற்ற நெருக்கடி இருப்பதாகக் கூறி பெரும் கலவரத்தை தூண்டிவிட இந்துத்துவ அமைப்புகள் திட்டமிட்டன. ஆனால் மக்கள் அப்போதே அதை ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளவில்லை. விசாரணையின் முடிவில் மதமாற்ற முயற்சிகள் எதுவும் நடக்கவில்லை என்பது உறுதியானது. 2023ஆம் ஆண்டு கிருஷ்ணகிரியில் இராணுவ வீரர் ஒருவர் கொலை செய்யப்பட்ட விவகாரத்தை, மிகப்பெரிய சட்டம்– ஒழுங்கு சிக்கல் போல மாற்றி தேசிய அளவிலான விவாதமாக்கியது பாஜக. ஆனால் குடும்பப் பிரச்னையால் கொலை செய்யப்பட்டவருக்கும், சட்டம் – ஒழுங்கு சீர்கேட்டுக்கும் என்ன தொடர்பு என்று, மக்கள் பாஜகவின் மலிவு அரசியலை புறந்தள்ளினார்கள்.

ஆளுநர் மாளிகை முன்பு ரவுடி கருக்கா வினோத் பெட்ரோல் குண்டு வீசியதை தீவிரவாத செயல் போல ஆளுநர் ஆர்.என்.ரவியும், அண்ணாமலையும் சித்தரித்தார்கள். ஏற்கெனவே கருக்கா வினோத் சிறையில் இருந்தபோது, அவரை பிணையில் எடுத்ததே பாஜகவைச் சேர்ந்த வழக்கறிஞர்கள்தான் என்ற உண்மை தெரிய வந்தது. இப்படி கடந்த 3 ஆண்டுகளாகவே பாஜகவின் முயற்சிகள் அனைத்தின் பின்னணியிலும் தமிழ்நாட்டின் அமைதியை சீர்குலைத்து, வீண் குழப்பத்தை ஏற்படுத்தி, அதன்மூலம் அரசியல் பலனைப் பெற வேண்டுமென்பதாகவே இருந்தது. ஆனால் மதத்தையும், அரசியலையும் ஒன்றாகக் கலக்காமல், பக்தியின் பெயரால் மதவாதத்தை திணித்துக்கொள்ளாமல் தெளிவோடு சிந்திக்கிற மக்களைக் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. அதனால் பாஜகவின் இத்தகைய முயற்சிகள் அனைத்தும் தொடக்க நிலையிலேயே கிள்ளி எறியப்பட்டுவிட்டன.

எனவே பாஜக கடந்த 3 ஆண்டுகளாக எதை முயற்சித்துக் கொண்டிருந்ததோ, அதைத்தான் இப்போது உடையார் வெளிப்படையாகப் பேசியிருக்கிறார். பாஜகவின் சாதிய– மதவாத– சனாதன கலவரக் கொள்கைகள் தமிழ்நாட்டில் ஒருபோதும் வெற்றி பெறாது என்பதை இந்துத்துவவாதிகள் இனியாவது உணர வேண்டும். இங்கே பெரியாரின் சமத்துவம் – சம உரிமை என்ற கல(ழ)க் கொள்கையே வெற்றி பெறும். தேர்தல் முடிவுகளும் அதைத்தான் சொல்கின்றன.


## திருமணம் தனிநபரின் உரிமை

“திருமணம் என்பதில் சம்மந்தப்பட்ட ஆணுக்கோ அல்லது பெண்ணுக்கோ தவிர, மற்ற எவருக்கும் அதில் முடிவெடுக்க உரிமையில்லை. கட்டாயத் திருமணங்கள் ஒழிக்கப்பட்டு, மேலை நாடுகளைப் போல நம் நாட்டிலும் அவரவர் வாழ்க்கைத் துணையை அவரவரே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்” என்று ஒரு நூற்றாண்டுக்கு முன்பே பேசியவர் பெரியார். பேசியதோடு மட்டுமில்லாமல் ஜாதியின் பெயரால், மதத்தின் பெயரால் நம்மை அடிமைப்படுத்தும் பார்ப்பன மதச் சடங்குகளில் இருந்து விடுவித்துக் கொண்டு, சுயமரியாதை உணர்வோடு இணையர்களாய் கரம் கோர்ப்பதற்கான சுயமரியாதைத் திருமண முறையையும் பெரியார் அறிமுகப்படுத்தினார்.

முதல் சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றது 1928ஆம் ஆண்டில். இன்னும் 4 ஆண்டுகளில் சுயமரியாதைத் திருமணங்கள் தமிழ்நாட்டில் நடைமுறைக்கு வந்து ஒரு நூற்றாண்டு ஆகப்போகிறது. பேரறிஞர் அண்ணாவின் ஆட்சிக்காலத்தில் இதற்கு சட்டப்பூர்வ அங்கீகாரமும் கிடைத்துவிட்டது. ஆனால் இன்றைக்கும் தமிழ்நாட்டைத் தவிர மற்ற எந்த மாநிலங்களிலும் இத்தகைய சுயமரியாதைத் திருமணங்களுக்கு அங்கீகாரம் இல்லை. அதனாலேயே காதல் திருமணங்களோ அல்லது ஜாதி கடந்த திருமணங்களோ பிற மாநிலங்களில் நடைபெறுவதும் சுலபமான ஒன்றாக இல்லை.

அந்த நிலை இனிவரும் காலங்களில் மாறக்கூடும் என்பதற்கான அறிகுறியாய் அமைந்திருக்கிறது கேரள உயர்நீதிமன்றத்தின் சமீபத்திய தீர்ப்பு. ஜெர்மனியில் முதுகலை மாணவராக இருக்கும் ஒருவர், கேரளாவைச் சேர்ந்த 27 வயது இளம்பெண்ணை காதலிப்பதாகவும், இதைத் தெரிந்து அவரது குடும்பத்தினர் அப்பெண்ணை வீட்டுச்சிறையிலேயே வைத்திருப்பதாகவும் கேரள உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். காணொளி காட்சி மூலம் இந்த வழக்கை விசாரித்த கேரள உயர்நீதிமன்ற நீதிபதிகள், “பெற்றோரின் அன்போ அக்கறையோ, வயது வந்தவரின் விருப்பத்தை, உரிமையைப் பறித்துவிடாது” என்று மிக அழுத்தமாக கூறியுள்ளனர். வயது வந்த இளம்பெண்ணை சட்டவிரோதமாக வீட்டில் அடைத்துவைத்த பெற்றோர் உடனடியாக அப்பெண்ணை விடுவிக்க வேண்டும் என்றும், மனுதாரரான அவரது காதலருடன் செல்லலாம் என்று கேரள உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. திருமண விவகாரத்தில் பெற்றோராக இருந்தாலுமே இணையர்களை தாண்டி, வேறு எவருக்கும் தலையிட உரிமையில்லை என்ற முன்மாதிரியான இந்தத் தீர்ப்பு வரவேற்கப்பட வேண்டியது.

## குடிஅரசு கையேடு



1925 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு 1949 நவம்பர் முடிய வெளிவந்த ‘குடி அரசு’ வார ஏடு தமிழ்நாட்டின் வரலாற்றுப் போக்கையும் அதனோடு தொடர்புள்ள இந்திய வரலாற்றுப் போக்கையும் சமூகப்புரட்சிப் பார்வையில் புரிந்து கொள்ளவும்; பெரியாரின் பொதுவாழ்வில் நிகழ்ந்த இயங்கியல் மாற்றங்களையும், கொள்கை, வேலைத்திட்ட வளர்ச்சிப் போக்குகளையும் வெளிப்படுத்தவுமான மிகச்சிறந்த ஆவணமாகும்.

சுயமரியாதை இயக்கம் சுடர்விட்டுப் பரவி காட்டாற்று வெள்ளம்போல் சமுதாயக் கசடுகளை அடித்துச் சிதைத்தவாறு முழு வீச்சோடு களமிறங்கியது. 1938 டிசம்பர் இறுதி நாட்களில் சென்னையில் நடைபெற்ற மாநாட்டில் நீதிக்கட்சி என்னும் தென் இந்திய நலஉரிமைச் சங்கத்தின் தலைவராக இந்தி எதிர்ப்புக்காய் சிறைப்பட்டிருந்த நிலையிலேயே பெரியார் தேர்ந்தெடுக்கப்பட்டார். முற்று முழுதாக வேறு திசை விலகலின்றி சமுதாய சமத்துவம், பகுத்தறிவுப் பணிகளை மட்டுமே ஆற்றிவந்த அருமையான காலகட்டம் 1925 முதல் 1938 வரையிலான காலமாகும். இந்தக் கால இடைவெளியில் ‘குடி அரசு’ ஏட்டில் வெளி வந்துள்ள பெரியாரின் எழுத்துகளையும் பேச்சுகளையும் தொகுத்து ‘பெரியார் திராவிடர் கழகம்’ பல்வேறு தடைகளை சந்தித்து வெளியிட்டது.

இந்த குடிஅரசு நூற்றாண்டில் தொகுப்பிலுள்ள பதிப்புரை மட்டும் சிறு கையேடாய். ஒவ்வொரு பதிப்புரையிலும் அந்த 6 மாதத்திற்கான குடிஅரசு செய்தி வழிகாட்டலும் முக்கிய கட்டுரைகளின் விளக்கமும் மறுவாசிப்பிற்கு தூண்டுகோலாய் அமையும். குடிஅரசு இதழை மறுவாசிப்பு செய்து இந்த காலச்சூழலோடு பொருத்தி பெரியாரின் கொள்கை முழக்கத்தை மேலும் பரப்புவோம்.

புத்தகம் பெற – ஜிபே – வாட்ஸ் அப் எண் : 94986 56683

## தோழர் திலீபனின் தாயார் முடிவெய்தினார்!



ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் திலீபனின் தாயார் தாயாரம்மாள் 03.06.2024 திங்கட்கிழமை இரவு 11.30 மணி அளவில் முடிவெய்தினார். இறுதி நிகழ்வு இன்று 04.06.2024 மாலை 4.30 மணி அளவில் ராணிப்பேட்டை மாவட்டம் பெரப்பேரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது. அம்மையாரின் உடலுக்கு வேலூர் மாவட்டக் கழகத் தோழர்கள் மரியாதை செலுத்தினார்கள்.

அம்மையாரின் படத்திறப்பு மற்றும் நினைவேந்தல் கூட்டம், 15.06.2024 அன்று அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இதில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திருமூர்த்தி, கழக மாநிலப் பொறுப்பாளர்கள் மற்றும் தோழமை இயக்கத்தினர் பங்கேற்கின்றனர்.

# ஜி.ஆர்.சாமிநாதனின் சித்தாந்தப் பின்புலம்

**பிறர் சாப்பிட்ட எச்சில் இலையில் பக்தர்கள் உருள விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கி உத்தரவிட்ட உயர்நீதிமன்ற மதுரைக்கிளை நீதிபதி ஜி.ஆர்.சாமிநாதனின் தீர்ப்பை கண்டித்து, அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி கடிதம் எழுதியுள்ளார். இதுதொடர்பாக Voice of South யூடியூப் சேனலுக்கு கழகத் தலைவர் அளித்த நேர்காணலின் தொடர்ச்சி.**

*இந்த வழக்கு மட்டுமல்ல, பல வழக்குகளில் ஜி.ஆர்.சாமிநாதன் நியாயமாக நடந்துகொள்ளவில்லை. அண்மையில் சவுக்கு சங்கர் என்பவரின் வழக்கில் கூட, 15 வழக்குகளை தள்ளிவைத்துவிட்டு அந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டார். 2 செல்வாக்கு உள்ள நபர்கள் அவருடைய அறைக்குச் சென்று, சவுக்கு சங்கர் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளக்கூடாது என்று வற்புறுத்தினார்கள் என்றும், அது நீதிமன்ற நடவடிக்கைக்கு எதிரானது என்பதால் உடனடியாக விசாரித்தேன் என்றும் ஜி.ஆர்.சாமிநாதன் கூறியிருக்கிறார். அது ஒருவேளை உண்மை என்றால், தானாகவே (suo moto) அவர்கள் மீது விசாரணை நடத்தலாம் அல்லது நடவடிக்கை எடுக்கக்கோரி தலைமை நீதிபதிக்கு கடிதம் எழுதலாம்.*

*நான் கூட 3 முறை தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளேன். என்னுடைய வழக்கை உடனே விசாரிக்கக்கூடாது என்பதற்காக, நான் ஜி.ஆர்.சாமிநாதனை சந்தித்து, "ஒழுங்காக என்னுடைய வழக்கை இன்றே விசாரி" என்று சொன்னால் விசாரிக்காமல் ஒத்திவைத்துவிடுவாரா என்ற சந்தேகம் வருகிறது. யாராவது இப்படிக் கேட்டால், வரிசைப்படிதான் விசாரிப்போம் என்று ஒரு நீதிபதியால் சொல்ல முடியாதா? இப்படி நீதிபதி அலுவலகங்களை தேடிச்சென்று முறையிடுவது வழக்கத்தில் இருக்கிறதா என்றும் தெரியவில்லை. ஒரு நீதிபதியின் நியாயமான உணர்வுகளை பிரதிபலிப்பதாக ஜி.ஆர்.சாமிநாதனின் செயல் இல்லை. இதில் உள்நோக்கம் இருப்பதாக நாங்கள் சந்தேகிக்கிறோம். சவுக்கு சங்கர் வழக்கில் மட்டுமல்ல, இதற்குமுன்பு மாரிதாஸ் வழக்கிலும் ஜி.ஆர்.சாமிநாதன் செயல்பாடு அப்படித்தான் இருந்தது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த மறுநாளே அதை ரத்து செய்தார். விசாரணையே நடத்தாமல் எப்படி தள்ளுபடி செய்யலாம் என தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. முதல் தகவல் அறிக்கையை ஒரே நாளில் தள்ளுபடி செய்யும் அளவுக்கு என்ன அவசரம் வந்தது என ஜி.ஆர்.சாமிநாதன் உத்தரவுக்கு தடை விதித்தது உச்சநீதிமன்றம்.*

*பள்ளி மாணவர்கள், காவல்துறை, இராணுவத்தைப் போல நீதிபதிகளுக்கும் சீருடை உள்ளது. ஆனால் ஜி.ஆர்.சாமிநாதன் முறையாக சீருடை அணிவதே இல்லை.*



கொளத்தூர் மணி

தான் யார் என்பதை மற்றவர்களுக்கு வெளிக்காட்டிக்கொள்ளும் வகையில் ஜி.ஆர்.சாமிநாதன் உடை அணிகிறாரா என்று தெரியவில்லை. மைக்கேல்பட்டியில் உள்ள கிறிஸ்தவப் பள்ளியில் மதமாற்றம் நடந்ததாகக் கூறி, ஆசிரியை கைது செய்யப்பட்டார். அவரது ஜாமின் மனுவை விசாரித்த ஜி.ஆர்.சாமிநாதன், "மக்களிடம் செல்லுங்கள், மதத்தைப் பரப்புங்கள்" என்று பைபிளில் கூறியிருப்பதைச் சுட்டிக்காட்டி, இவர் மதமாற்றம் செய்திருப்பார் என்பதைப் போன்ற கருத்தை தெரிவித்தார். எப்படி இத்தகையக் கருத்துக்களை ஒரு நீதிபதியால் சொல்ல முடியும்? இதுபோன்ற கருத்துகள் வழக்கை நடத்தும் மாவட்ட நீதிபதியிடம் தாக்கத்தை ஏற்படுத்தாதா? இவையெல்லாம் மிகத் தவறான போக்காகும்.

ஜி.ஆர்.சாமிநாதன் மட்டும் இல்லை, இந்த சமயத்திலாவது இப்படிப்பட்ட சில நீதிபதிகள் குறித்து நாம் பேசியாக வேண்டும். மாண்புமிகு அமைச்சர் உதயநிதி சனாதனத்திற்கு எதிராகப் பேசினார், எனவே அவரை தகுதிநீக்கம் செய்ய வேண்டுமென்று ஒருவர் வழக்கு தொடுத்தார். மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி, அவரவர் கருத்தைச் சொல்ல யாருக்கும் உரிமை உண்டு, எனவே தகுதிநீக்கம் செய்ய முடியாது எனத் தீர்ப்பு வழங்கினார் நீதிபதி அனிதா சுமந்த். ஆனால் அதே தீர்ப்பில் சனாதனம் என்றால் என்ன? அது எவ்வளவு பெருமைக்குரியது? என்று 10 பக்கங்கள் குறிப்பிட்டார் அந்த நீதிபதி. அதையெல்லாம் கூட்டங்களில் சென்று பேசலாம். ஜி.ஆர்.சாமிநாதன் கூட ஒரு கூட்டத்தில் பேசினார். "ஆத்துக்கு என்று சொல்லதான் விருப்பம்... ஆனால் வீட்டுக்கு என்று சொல்கிறேன்" என்று கூறினார். தான் யார் என்பதை பதிவு செய்வதற்காக அப்படிக் கூறினார்.

அதே நிகழ்ச்சியில் இன்னொன்றையும் கூறினார் ஜி.ஆர்.சாமிநாதன். "என்னுடைய அலுவலகத்தில் பெரியவா (சங்கராச்சாரி) படத்தை வைத்திருந்தேன். ஒருவர் வந்தார். யார் இவர்... உங்களுடைய தாத்தாவா என்று கேட்டார். அவர் அறநிலையத்துறை அமைச்சராகக் கூட இருந்தவர்" என்று அவரைப் போலவே பேசிக்காட்டி, "திராவிட மாடல் போல திராவிடக் குரல் ஒன்று உள்ளது" என நக்கலடித்துச் சொன்னார். ஒரு அரசு தன்னைப் பெருமையாகச் சொல்கிற திராவிட மாடலை, ஒரு இயக்கத்தை பொது இடத்தில் ஒரு நீதிபதி இழிவுபடுத்திப் பேசலாமா? பாரதிய சம்பிரதாயங்களைப் பின்பற்றுங்கள் என்றும் அந்தக் கூட்டத்தில் சொல்கிறார் ஜி.ஆர்.சாமிநாதன். அதென்ன பாரதிய சம்பிரதாயம்? வருணாசிரம சம்பிரதாயம் என்றுச் சொல்லாமல் அதற்கு மாற்றான சொல்லாக பாரதிய சம்பிரதாயம் என்று கூறினார். இவரைப் போன்றவர்களை நீதிக்காக நாம் நம்பியிருக்க முடியுமா?

உச்சநீதிமன்ற நீதிபதி, இரு அமர்வு நீதிபதிகள் சொன்னதை ஒரு உயர்நீதிமன்ற நீதிபதி ரத்து செய்தால், நாளை ஒரு உயர்நீதிமன்ற நீதிபதி சொன்ன தீர்ப்பை மாவட்ட நீதிபதி ரத்து செய்யலாம், மாவட்ட நீதிபதி கொடுத்த தீர்ப்பை மாஜிஸ்திரேட் ரத்து செய்யலாம். இது இப்படியே போய்க் கொண்டிருக்கும். இப்படியே போனால் நீதித்துறை என்ன ஆகும்? அதன் மாண்பு என்ன ஆகும்? என்ற நோக்கம்தான் நான் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்குக் கடிதம் எழுதக் காரணம். ஏன் அரசு வழக்கறிஞர்கள் இதை சுட்டிக்காட்டவில்லை என்ற கவலையும் எழுகிறது. அரசு நியமிக்கிற வழக்கறிஞர் சமூக அக்கறை அற்றவர்களாகவோ அல்லது கொள்கைப் புரியாதவர்களாகவோ இருந்திருப்பார்களா எனத் தெரியவில்லை. இதைப்பற்றி அரசு சிந்திக்க வேண்டும்.

**நெறியாளர்:** பாஜகவைச் சேர்ந்த நபர் தொடுத்த வழக்கில்தான் ஜி.ஆர்.சாமிநாதன் இப்படியொரு தீர்ப்பைக் கொடுத்திருக்கிறார். அவர் கொடுக்கும் தீர்ப்புகள் எல்லாமே குறிப்பிட்ட சித்தாந்தத்தைப் பிரதிபலிப்பதாக உள்ளது என்றும் விமர்சனங்கள் எழுகின்றனவே?

**கொளத்தூர் மணி:** பாஜகவைச் சேர்ந்தவர்தான், ஆனால் "எனக்கு உருள வேண்டும் என்று ஆசையாக உள்ளது" எனச் சொல்கிறார். உடலை தேய்த்துக்கொள்ள சில விலங்குகள்தான் அவ்வாறு செய்துகொள்ளும் பழக்கத்தை வைத்துள்ளன. இங்கு மனிதர் ஒருவர் கேட்கிறார்! 2016-ஆம் ஆண்டில் பாரதிய ஜனதா கட்சியின் ஒன்றிய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சரே, கர்நாடகா மற்றும் கரூரில் எச்சில் இலையில் பக்தர்கள் உருளும் சம்பவங்களைக் குறிப்பிட்டு, இரண்டும் மனித மாண்புக்கு எதிராக உள்ளது என உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். அந்த வழக்கு நிலுவையில் உள்ளது. பாஜகவின் அமைச்சரே இதற்கு எதிராகத்தான் வழக்கு தொடுத்திருக்கிறார் என்பதை இப்போது வழக்கு தொடுத்தவர் புரிந்துகொள்ள வேண்டும்.

(நிறைவு)

# ஜி.ஆர்.சாமிநாதன் தீர்ப்புக்கு அதிருப்தி!



பெண் காவலர்களை அவதூறாகப் பேசியதாக கைது செய்யப்பட்ட சவுக்கு சங்கர் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதை எதிர்த்து சவுக்கு சங்கரின் தாயார் கமலா உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுவை ஜி.ஆர். சாமிநாதன், பாலாஜி ஆகிய இரு நீதிபதிகள் அடங்கிய அமர்வு விசாரித்தது. இதில் ஜி.ஆர்.சாமிநாதன் மட்டும் குண்டர் தடுப்புச் சட்டத்தை ரத்து செய்து உத்தரவிட்டார். இந்த வழக்கை விசாரிக்கக்கூடாது என்று தனிப்பட்ட முறையில் தனக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டதால் உடனே விசாரணைக்கு எடுத்ததாகக் கூறினார் ஜி.ஆர்.சாமிநாதன். அத்துடன் சவுக்கு சங்கர் மீதான குண்டர் தடுப்புச் சட்டத்தையும் ரத்து செய்தார். நீதிபதி பாலாஜி குண்டர் தடுப்புச் சட்டத்தை ரத்து செய்யாததால், வழக்கு மூன்றாவது நீதிபதி ஜெயச்சந்திரனுக்கு மாற்றப்பட்டது.

‘‘நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் அவசர கதியில் உத்தரவு பிறப்பித்துள்ளார். மற்றொரு நீதிபதி பாலாஜியுடன் கலந்து ஆலோசிக்கவில்லை. காவல்துறைக்கு எதிராக பாரபட்சமாக நடந்து கொண்டுள்ளார். பதில்மனு தாக்கல் செய்ய அரசுக்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை. எந்தவொரு நபரும் நியாயமான விசாரணை இல்லாமல் தீர்ப்பளிக்கக்கூடாது என்பது சட்டக்கல்லூரிகளில் கற்பிக்கப்படும் முதல் பாடம்’’ என்று நீதிபதி ஜெயச்சந்திரன் குறிப்பிட்டுள்ளார். ஒருதலைப்பட்சமாக உள்நோக்கத்தோடு ஜி.ஆர். சாமிநாதன் தீர்ப்பு வழங்குகிறார் என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி, உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதிக்கு கடிதம் எழுதியுள்ள நிலையில், அந்த குற்றச்சாட்டுக்கு வலு சேர்க்கும் விதமாக நீதிபதி ஜெயச்சந்திரனின் கருத்து அமைந்துள்ளது.

date of publication - every thursday tamil weekly  Reg.No.tn/cc(S)Dn/459/22-24  licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776


## பாஜகவின் வாரிசு அரசியலைப் பாரீர்

திமுக, காங்கிரஸ், ராஷ்டிரிய ஜனதா தளம் உள்ளிட்ட மதச்சார்பற்ற அரசியல் கட்சிகள் குறித்து பாஜகவினர் விமர்சனங்களை வைக்கும்போதெல்லாம் தவறாமல் குறிப்பிடுவது 'வாரிசு அரசியல்'. வாரிசு அரசியலால் இக்கட்சிகள் நாட்டையே சீரழித்துவிட்டன என்பதுபோல மோடி, அமித் ஷா உள்ளிட்ட பாஜகவை சேர்ந்த பலரும் பேசியிருக்கிறார்கள். ஆனால் இப்போது மோடியின் மூன்றாவது ஆட்சியிலும், அமைச்சரவையிலும் வாரிசுகளாக நிரம்பிக் கிடக்கிறார்கள். அந்த பட்டியலை ராகுல் காந்தி தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். "பல தலைமுறைகளாக போராட்டம், சேவை, தியாக உணர்வுடன் உள்ள பாரம்பரியத்தை வாரிசு அரசியல் என சொல்லும் மோடியின் 3.0 அரசில் 20 வாரிசுகள் உள்ளனர். இது மோடியின் சொல்லுக்கும் செயலுக்கும் உள்ள வித்தியாசத்தையே காட்டுகிறது. என்று அவர் காட்டமாக பதிவிட்டுள்ளார்.

### பட்டியல்

1. எச்.டி.குமாரசாமி  முன்னாள் பிரதமர் தேவகவுடாவின் மகன்.
2. ஜெயந்த் சவுத்ரி  முன்னாள் பிரதமர் சவுத்ரி சரண் சிங்கின் பேரன்.
3. ராம்நாத் தாக்கூர்  பீகார் முன்னாள் முதல்வர் கர்பூரி தாக்கூரின் மகன்.
4. ராவ் இந்தர்ஜித் சிங்  அரியானா முன்னாள் முதல்வர் ராவ் பிரேந்திர சிங்கின் மகன்.
5. ரவ்னீத் சிங் பிட்டு  பஞ்சாப் முன்னாள் முதல்வர் பியாந்த் சிங்கின் பேரன்.
6. ஜோதிராதித்ய சிந்தியா  முன்னாள் ஒன்றிய அமைச்சர் மாதவ் ராவ் சிந்தியாவின் மகன்.
7. சிராக் பாஸ்வான்  முன்னாள் ஒன்றிய அமைச்சர் ராம் விலாஸ் பாஸ்வானின் மகன்.
8. ராம் மோகன் நாயுடு  முன்னாள் ஒன்றிய அமைச்சர் எரன் நாயுடுவின் மகன்.
9. பியூஷ் கோயல்  முன்னாள் ஒன்றிய அமைச்சர் வேத் பிரகாஷ் கோயலின் மகன்.
10. தர்மேந்திர பிரதான்  முன்னாள் ஒன்றிய அமைச்சர் தேபேந்திர பிரதானின் மகன்.
11. கிரண் ரிஜிஜு  அருணாச்சல் முன்னாள் சபாநாயகர் ரிஞ்சின் காருவின் மகன்.
12. ஜே.பி. நட்டா  மத்தியப் பிரதேசத்தின் முன்னாள் எம்.பி மற்றும் அமைச்சர் ஜெய்ஸ்ரீ பானர்ஜியின் மருமகன்.
13. ஜிதின் பிரசாதா  உத்தரப்பிரதேச முன்னாள் எம்.பி. ஜிதேந்திர பிரசாதா மகன்.
14. கிர்த்தி வர்தன் சிங்  உத்தரப் பிரதேச முன்னாள் அமைச்சர் மகாராஜ் ஆனந்த் சிங்கின் மகன்.
15. அனுப்ரியா படேல்  பகுஜன் சமாஜ் கட்சி மற்றும் அப்னா தளம் நிறுவனர் சோனேலால் படேலின் மகள்.
16. ரக்ஷா கட்சே  மகாராஷ்டிரா முன்னாள் அமைச்சர் ஏக்நாத் கட்சேவின் மருமகள்.
17. கமலேஷ் பஸ்வான்  உத்தரப் பிரதேச மக்களவை வேட்பாளர் ஓம் பிரகாஷ் பஸ்வானின் மகன் இவர்.
18. சாந்தனு தாக்கூர்  மேற்கு வங்க முன்னாள் அமைச்சர் மஞ்சுல் கிருஷ்ணா தாகூரின் மகன்.
19. வீரேந்திர குமார் காதிக்  மத்தியப்பிரதேச முன்னாள் அமைச்சர் கவுரிசங்கர் ஷெஜ்வாரின் மைத்துனர்.
20. அன்னபூர்ணா தேவி  பிகார் முன்னாள் எம்எல்ஏ ரமேஷ் பிரசாத் யாதவின் மனைவி.

## மோடியை கைவிட்ட ராமன்!



• ராமஜென்ம பூமியாக கூறப்படும் அயோத்தி (ஃபைசாபாத்) தொகுதியில் தோல்வி..

• ராமர் 11 வருடங்கள் வனவாசத்தில் இருந்ததாக கூறப்படும் சித்ர கூட் "பண்டா" தொகுதியில் பாஜக தோல்வி..

• ராமரின் மனைவி சீதாவின் புனித தலமாக கூறப்படும் "சீதாபூர் மா" தொகுதியில் பாஜக தோல்வி..

• ராமருடன் தொடர்புபடுத்தி பேசப்படும் "சுல்தான்பூர்" தொகுதியில் பாஜக தோல்வி..

• ராமரின் வனவாசத்தில் முக்கிய இடமாக கூறப்படும் "பிரக்யா ராஜ்" தொகுதியில் பாஜக தோல்வி..

• ராமரின் வனவாசத்தின் போது அவர் தங்கி இருந்த இடமாக கூறப்படும் "ராம்தேக்" தொகுதியில் பாஜக தோல்வி..

• ராமரின் சகோதரனான இலட்சுமணன் சூர்ப்பனகையின் மூக்கை அறுத்த இடமாக கூறப்படும் "நாசிக்" தொகுதியில் பாஜக தோல்வி..

• அனுமாரின் ஜென்ம பூமியாக கூறப்படும் "கொப்பல்" தொகுதியில் பாஜக தோல்வி..

• ராமர் இலங்கைக்கு சென்றதாகக் கூறப்படும் ராமேஸ்வரம் (ராமநாதபுரம்) தொகுதியில் பாஜக கூட்டணி வேட்பாளர் தோல்வி..


## அரசியலமைப்பின் மீது உறுதியேற்ற அமைச்சர்கள்!

நரேந்திர மோடி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அமைச்சரவை ஜூன் 9ஆம் தேதி பதவியேற்றது. இசுலாமிய வெறுப்பை மட்டுமே மூலதனமாகக் கொண்டு தேர்தல் பரப்புரையில் ஈடுபட்ட பிரதமர் மோடி, இப்போது தனது அமைச்சரவையிலும் ஒரு இசுலாமியருக்கு கூட இடம் அளிக்கவில்லை. அதுமட்டுமின்றி பாஜகவின் சார்பாக அமைச்சர்களாகி இருக்கும் அனைவரும் கடவுளின் பெயராலேயே பதவியேற்றுக் கொண்டனர். ஆனாலும் இது முழுமையான பாஜக ஆட்சி இல்லை. கூட்டணி ஆட்சிதான் என்பதை உணர்த்தும் விதமான நிகழ்வுகளும் பதவியேற்பில் நடந்திருக்கின்றன.

இந்துஸ்தானி அவாம் மோர்ச்சா (மதச்சார்பற்ற) கட்சியின் ஜிதன்ராம் மாஞ்சி, ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் ராஜிவ் ரஞ்சன், அப்னா தளம் கட்சியின் அனுப்பிரியா, தெலுங்குதேசம் கட்சியின் சந்திரசேகர், இந்தியக் குடியரசு கட்சியின் ராம்தாஸ் அத்வாலே ஆகிய 5 பேரும் அரசியலமைப்பின் மீது உறுதியேற்று ஒன்றிய அமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர். இவர்கள் யாரும் பதவியேற்பின்போது கடவுளின் பெயரைக் குறிப்பிட்டுக்கொள்ளவில்லை. இவர்கள் அனைவருமே பாஜகவின் கூட்டணிக் கட்சிகள் சார்பாக அமைச்சர்கள் ஆகியிருப்பவர்கள்.

அதுமட்டுமல்ல, இந்தியாவின் பன்முகத்தன்மைக்கு மேலும் உதாரணமாக, இந்தியாவின் தெற்கு, கிழக்கு, வடக்கிழக்கு மாநிலங்களில் இருந்து அமைச்சர்களாகியிருக்கும் பலர் இந்தியைத் தவிர்த்துவிட்டு, ஆங்கிலத்தில் பதவியேற்றனர். பாஜகவில் இருக்கும் சர்பானந்தா சோனாவால், நிர்மலா சீதாராமன், ஜெய்சங்கர் போன்றவர்கள் கூட ஆங்கிலத்தில்தான் பதவியேற்றனர். இந்த பன்முகத்தன்மை தொடர வேண்டும். இந்தி ஒருபோதும் தேசிய மொழி ஆகாது.

## எச்சிலில் உருள்வது யாரால்?




அறிவியல் மனப்பான்மையை வளர்க்க வேண்டும் என்ற அரசியலமைப்புச் சட்டத்தின் அடிநாதத்தின்படி மக்களுக்கு பகுத்தறிவூட்டி மானமும் அறிவும் மிக்க சமுதாயமாய் இந்த திராவிட சமுதாயத்தை உலகிலுள்ள பிற சமுதாயங்களுக்கு ஒப்பாக கொண்டு வர தன் வாழ்நாளெல்லாம் உழைத்த தந்தை பெரியாரின் வழியில் இயங்கும் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி அவர்களின் கோரிக்கை மனுவை உள்ளடக்கியதே இந்த சிறு வெளியீடு.

உயர்நீதிமன்ற நீதிபதி ஜி ஆர் சாமிநாதன் அவர்களின் மூடத்தனமான திர்ப்பை கேள்விக்குள்ளாக்கி உச்சநீதிமன்ற நீதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்ற கோரிக்கை மனுவும் அதோடு பார்ப்பனர் உண்ட எச்சில் இலையில் உருண்டு புரள்வது புண்ணியம் என்று கட்டமைத்து வைத்திருக்கும் சனாதனத்தை கேள்விக்குள்ளாக்கி மக்களை கண்ணியத்தோடு வாழ வைக்க வேண்டிய முயற்சியின் ஓர் அங்கமே இந்த வெளியீடு.

32 பக்கங்கள், 30 ரூபாய். நிமிர்வோம் வெளியீடு
புத்தகம் பெற ஜி பே - வாட்ஸ் அப் 94986 56683

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : June 14, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran